TNNG020044582022

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**முன்னிலை. திரு. கோ. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,**

தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம்.

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 23ம் தேதி வியாழக்கிழமை

(திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி மாதம் 07ம் நாள்)

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.578/2022**

**CNR.No.TNNG02-004458-2022**

| | | |
|---|---|---|
| 1 | குற்றமுறையீட்டாளர் பெயர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>வெளிப்பாளையம் காவல் நிலைய<br>குற்ற எண்.110/2022. |
| 2 | எதிரி | ஜீவா, ஆ/வ.28/2022<br>த/பெ. ரமேஷ்,<br>சமத்துவபுரம், பாப்பாகோவில். |
| 3 | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | கடந்த 05.03.2022 ஆம் தேதி எதிரி கைது செய்யப்பட்டுள்ளார். |
| 4 | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | கடந்த 05.03.2022 ஆம் தேதியே எதிரி காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| 5 | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் ஆண்டுப்பட்டிகை வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | கடந்த 03.06.2022 ஆம் தேதி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம், நாகப்பட்டினத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC.No.578/2022 ஆக கடந்த 06.06.2022 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:36:59 +0530

<table>
<tr><td>6</td><td>நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம் நாகப்பட்டினத்தில் இருந்து, இந்நீதிமன்றத்திற்கு வழக்கு அனுப்பி வைக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட நாள்</td><td colspan="3">மேற்படி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திலிருந்து, u/s. 410 of Cr.P.C./ u/s. 450 of BNSS, 2023ன் படி இந்நீதிமன்றத்தால் Withdraw செய்து, கடந்த 24.10.2025 ஆம் தேதி பெறப்பட்டது.</td></tr>
<tr><td>7</td><td>u/s. 263 of BNSS, 2023ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 279, 304(A) மற்றும் u/s. 4 (1) (aa) TNP Act (Transport)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் என்பதால், குற்றச்சாட்டுக்கள் தனியாக வனைந்து வினாவப்படவில்லை. மேற்படி குற்றச்சாட்டுக்களின் சாராம்சங்கள் குறித்து மட்டுமே எதிரியிடம் நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில், கடந்த 20.05.2024 ஆம் தேதி எடுத்துக்கூறி விளக்கி வினாவப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>8</td><td>வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள்</td><td colspan="3">இல்லை.</td></tr>
<tr><td>9</td><td>எதிரியின் கோரிக்கை</td><td colspan="3">பொய் வழக்கு. குற்றவாளி இல்லை.</td></tr>
<tr><td>10</td><td>இவ்வழக்கில் குவிமுச. பிரிவு 317ன் கீழான மனுக்கள் நீங்கலாக இதர தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அவைகள் மீதான உத்தரவு, அது சம்பந்தமான மேல் முறையீட்டு உத்தரவு</td><td colspan="3">இல்லை.</td></tr>
<tr><td rowspan="2">11</td><td rowspan="2">இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் நாள் விபரம்</td><td>அரசுத்தரப்பு/ எதிரிகள் தரப்பு சாட்சிகள்</td><td>முதல் விசாரணை நாள்</td><td>குறுக்கு விசாரணை நாள்</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>09.08.2024</td><td>09.08.2024</td></tr>
</table>

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:37:06 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா.2 | 09.08.2024 | 09.08.2024 |
| | | அ.சா.3 | 20.08.2024 | 20.08.2024 |
| | | அ.சா.4 | 20.08.2024 | 20.08.2024 |
| | | அ.சா.5 | 24.11.2025 | 24.11.2025 |
| | | அ.சா.6 | 08.12.2025 | 08.12.2025 |
| | | அ.சா.7 | 14.07.2026 | -- |
| | | அ.சா.8 | 14.07.2026 | -- |
| | | அ.சா.9 | 14.07.2026 | -- |
| | | அ.சா.10 | 21.07.2026 | 21.07.2026 |
| 12 | நீதிமன்றத்தின் முடிவு | முடிவில், இவ்வழக்கு எதிரியை இதச பிரிவுகள் 279, 304(A) மற்றும் u/s. 4 (1) (aa) TNP Act (Transport)ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டது. | | |
| 13 | தீர்ப்புரை | இவ்வழக்கு எதிரியை இதச பிரிவுகள் 279, 304(A) மற்றும் u/s. 4 (1) (aa) TNP Act (Transport)ன் கீழான குற்றச்சாட்டுக்களில் இருந்து, குவிமுச. பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்பட்டது. | | |
| 14 | வழக்கு சொத்து குறித்த உத்தரவு | இவ்வழக்கு சம்பந்தமாக வழக்குச் சொத்துக்கள் எதுவும் ஆஜர் செய்யப்படவில்லை. எனவே, வழக்குச் சொத்துப்பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. | | |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:37:12 +0530

இந்த ஆண்டுப்பட்டிகை வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இன்று 23.07.2026 ஆம் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றத்துறை அரசு வழக்கறிஞர் திரு. S. சரவணன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. R. நடேச ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்றே இந்நீதிமன்றம் இறுதியாக வழங்கிடும் ...

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 04.03.2022 ஆம் தேதி இரவு 10 மணியளவில், இவ்வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரர் திரு. பிரபாகரன் என்பவரின் முதலாளியான அருள்மொழி (எ) அருண்மொழி என்பவர் TN.25 W-5884 என்ற பதிவெண்கொண்ட CT 100 இருசக்கர வாகனத்தில் வேளாங்கண்ணியிலிருந்து ECR ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பாலையூர் பிரிவு சாலை அருகில் வந்துகொண்டிருந்துள்ளார். அப்போது இவ்வழக்கின் எதிரியானவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி NS என்ற பதிவுசெய்யப்படாத பல்சர் இருசக்கர வாகனத்தில், முன்பகுதியில் சட்ட முரணாக சாக்குமூட்டையில் சாராயத்தை விற்பனை செய்வதற்காக வைத்துக்கொண்டு, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதி, அவருக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளார். எனவே, இவ்வழக்கின் எதிரியானவர் இதச பிரிவுகள் 279, 304(A)ன் மற்றும் u/s. 4 (1) (aa) TNP

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:37:17 +0530

Act (Transport)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக சொல்லி, வெளிப்பாளையம் காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர் கடந்த 03.06.2022 ஆம் தேதி நாகப்பட்டினம், நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் இவ்வழக்கின் குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். அதனை பார்வையிட்டு பரிசீலனை செய்து, மேற்படி நீதித்துறை நடுவர் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.578/2022 ஆக இவ்வழக்கினை கடந்த 06.06.2022 ஆம் தேதி கோப்பிற்கு எடுத்துள்ளார்.

2. அதன்பின்னர், அழைப்பாணையின் அடிப்படையில், மேற்படி நீதித்துறை நீதிமன்றத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரிக்கு, இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச. பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. பின்பு போதிய கால அவகாசம் கொடுத்து இவ்வழக்கு எதிரியிடம் அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 279, 304(ஏ) மற்றும் u/s. 4 (1) (aa) TNP Act (Transport)ன் கீழான குற்றச்சாட்டுக்களின் சாராம்சங்கள் குறித்தும், அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட, இவ்வழக்கின் குற்ற அறிக்கை குறித்தும், கடந்த 20.05.2024 ஆம் தேதி மேற்படி நீதித்துறை நடுவரால், தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினாவப்பட்டுள்ளது. அப்போது இவ்வழக்கின் எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்து, தான் குற்றவாளி இல்லை என சொல்லி, பொய் வழக்கு எனக்கூறி, வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். அதனடிப்படையில் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு, மேற்படி நீதித்துறை நடுவரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:37:23 +0530

3. மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அசா.1 முதல் 4 வரையிலான சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, இதர அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக இவ்வழக்கு நிலுவையில் இருந்தது. இந்நிலையில், மேற்படி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திலிருந்து, u/s. 410 of Cr.P.C. / u/s.450 of BNSS, 2023ன் படி இந்நீதிமன்றத்தால் Withdraw செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ்வழக்கு கோப்பு இந்நீதிமன்றத்திற்கு, மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டு, கடந்த 24.10.2025 ஆம் தேதி இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டது. தொடர்ந்து இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்னர், அவரிடம் இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டதை உறுதி செய்துகொள்ளப்பட்டது. மீண்டும் அரசுத்தரப்பு சாட்சிகளின் தொடர் விசாரணைக்கு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

4. தொடர்ந்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அசா.5 முதல் 10 சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில் இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அசா.1 முதல் 10 வரையிலான சாட்சிகள் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, அசாஆ.1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:37:29 +0530

5. **அரசு தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் முன்வைக்கப்பட்ட வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

5 (1). கடந்த 04.03.2022 ஆம் தேதி இரவு 10.00 மணியளவில், இவ்வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரர் திரு. பிரபாகரன் என்பவரின் முதலாளியான அருள்மொழி (எ) அருண்மொழி என்பவர் TN.25 W-5884 என்ற பதிவெண்கொண்ட CT 100 இருசக்கர வாகனத்தில் வேளாங்கண்ணியிலிருந்து ECR ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பாலையூர் பிரிவு சாலை அருகில் வந்துகொண்டிருந்துள்ளார். அப்போது இவ்வழக்கின் எதிரியானவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி NS என்ற பல்சர் இருசக்கர வாகனத்தில், முன்பகுதியில் சாக்குமூட்டையில் சாராயத்தை வைத்துக்கொண்டு, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதியுள்ளார். அவ்வாறு மோதியதில், பலத்த காயமுற்ற மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியை யார் என தெரியாத நிலையில், நாகப்பட்டினம் 108 ஆம்புலன்ஸ் மூலம் நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டுபோய் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்காக மேற்படி மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு ஆவணம்தான் அசாஆ.9.

5 (2). விபத்து குறித்து தகவல் அறிந்து நிகழ்நிலைப் புகார்தாரர் பிரபாகரன், கடந்த 05.03.2022 ஆம் தேதி அதிகாலை 02.00 மணியளவில், வெளிப்பாளையம் காவல்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:37:34 +0530

நிலையம் ஆஜராகி, அங்கு நிலைய அலுவலில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளரான அசா.10 திரு. சிவக்குமாரிடம் அசாஆ.1 ஆன எழுத்து மூலமான புகாரினை கொடுத்துள்ளார். மேற்படி புகாரினை பெற்ற அசா.10, அதனடிப்படையில் வெளிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.110/2022, இதச பிரிவுகள் 279, 304(ஏ)ன் கீழ் அசாஆ.2 ஆன இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார். மேற்படி முதல் தகவல் அறிக்கையின் அசலை புகாருடன் இணைத்து நாகப்பட்டினம், நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றத்திற்கு அசா.10 அனுப்பி வைத்துள்ளார். இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அசா. 10 அனுப்பி வைத்துள்ளார். ஒரு நகலை புலன் விசாரணைக்காக, வெளிப்பாளையம் காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த திரு. பி. தியாகராஜன் அவர்களிடம் அசா.10 ஒப்படைத்துள்ளார்.

5 (3). இவ்வழக்கு கோப்பினை அசா.10திடமிருந்து புலன் விசாரணைக்காக பெற்றுக்கொண்ட மேற்படி காவல் ஆய்வாளர், கடந்த 05.03.2022ம் தேதி காலை 06.30 மணியளவில், சம்பவ இடம் சென்று அங்கிருந்த சாட்சிகளான அசா.6 திரு. ராதா கிருஷ்ணன் மற்றும் சாட்சி திரு. சசிக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அசாஆ.3 ஆன பார்வை மகசர் மற்றும் அசாஆ.4 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அசா.1 திரு. மதியழகன், அசா.2 திரு. சந்திரமோகன், அசா.3 திரு. ரூபா அகஸ்டின், அசா.4 திரு. செந்தில்குமார், அசா.5 திரு. ரகு, அசா.6 திரு. ராதா

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:37:40 +0530

கிருஷ்ணன் உள்ளிட்ட 1 முதல் 8 வரையிலான பட்டியல் சாட்சிகளை, மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

5 (4). இந்த விபத்தில் இறந்துபோன அருள்மொழி (எ) அருண்மொழி, பிரேதத்தின்மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் விசாரணை செய்து, மேற்படி காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியின் உடன்பிறந்த தம்பியான அசா.7 தசரதன் மற்றும் அவரது ஊரைச் சேர்ந்த அசா.8 திரு. ரகுபதி ஆகியோர்கள் இந்த விபத்து குறித்து கேள்விப்பட்டு, மேற்படி நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு வந்து பிரேத விசாரணையின்போது உடனிருந்துள்ளனர். பின்னர் மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியின் பிரேதத்தினை சடல கூராய்வு செய்யவேண்டி, தக்க வேண்டுகோள் கடிதத்தினை அசா.9 ஆன காவலர் 1422 திரு. முருகானந்தம் என்பவர் மூலம், நாகப்பட்டினம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு. சங்கர் அவர்களிடம் மேற்படி காவல் ஆய்வாளர் ஒப்படைத்துள்ளார். சடல கூராய்விற்கு பின்னர் அருள்மொழி (எ) அருண்மொழியின் பிரேதத்தினை அவரின் உறவினர்கள் வசம் மேற்படி காவலர் மூலமாகவே, மேற்படி காவல் ஆய்வாளர் ஒப்படைத்துள்ளார்.

5 (5). இவ்வழக்கின் எதிரியை கடந்த 05.03.2022ம் தேதியே மாலை சுமார் 05.00 மணியளவில், வெளிப்பாளையம் புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் வைத்து, இந்த

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:37:46 +0530

விபத்து சம்மந்தமாக மேற்படி காவல் ஆய்வாளர் கைது செய்துள்ளார். அன்று மாலை 05.15 மணியளவில் எதிரியை நிலையம் கொண்டுவந்து, இந்த விபத்தில் எதிரிக்கும் காயம் ஏற்பட்டிருந்ததால், உடனடியாக காவல் நிலைய பிணையில் எதிரியை மேற்படி காவல் ஆய்வாளர் விடுவித்துள்ளார்.

5 (6). கடந்த 06.03.2022ம் தேதி இவ்வழக்கின் சட்ட பிரிவுகளை இதச பிரிவுகள் 279, 304(ஏ)விலிருந்து இதச பிரிவுகள் 279, 304(ஏ) மற்றும் தமிழ்நாடு மதுவிலக்கு சட்ட பிரிவு 4(1)(எஎ)ன் கீழ் மேற்படி காவல் ஆய்வாளர் மாற்றம் செய்து, அசாஆ.5 ஆன சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். பிரேத விசாரணை அறிக்கை சாட்சிகளை கடந்த 06.03.2022ம் தேதி மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5 (7). இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN 25 W 5884 என்ற பஜாஜ் 100 இருசக்கர வாகனத்தையும், பதிவு செய்யப்படாத இருசக்கர வாகனத்தையும், மோட்டார் வாகன ஆய்விற்காக தக்க வேண்டுகோள் கடிதங்களுடன், கடந்த 15.03.2022ம் தேதி நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணியில் இருந்த திரு. கே. பிரபு அவர்களிடம், மேற்படி காவல் ஆய்வாளர் ஆஜர் செய்துள்ளார். மேற்படி வாகனங்களை ஆய்வு செய்த, மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர், இந்த விபத்தானது மேற்படி இரண்டு இருசக்கர வாகனங்களின் எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என கருத்து தெரிவித்து, முறையே

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:37:53 +0530

மசாஆ.6 மற்றும் 7 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை வழங்கியுள்ளார். அது சம்மந்தமாக மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளரை கடந்த 14.05.2022ம் தேதி மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5 (8). இந்த விபத்தில் இறந்துபோன அருள்மொழி (எ) அருண்மொழியின் பிரேதத்தின் மீது சடல கூராய்வு மேற்கொண்ட மேற்படி மருத்துவர் சங்கர் அவர்களை, கடந்த 14.05.2022ம் தேதி மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் மற்றும் அசாஆ.8 ஆன சடல கூராய்வு அறிக்கையை பெற்றுள்ளார். அசா.10ஐயும், மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியின் சடலகூராய்விற்கு உதவியாக இருந்த அசா.9 ஆன மேற்படி காவலர் முருகானந்தத்தையும், கடந்த 14.05.2022ம் தேதி மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிமீது இவ்வழக்கின் குற்ற அறிக்கையை மேற்படி காவல் ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளார்.

5 (9). இவ்வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்ட மேற்படி ஆய்வாளர் புலன் விசாரணையில் ஈடுப்பட்டபோது, மேற்படி காவல் ஆய்வாளருக்கு உதவியாக அசா.10 இருந்துள்ளார். அதனால் மேற்படி காவல் ஆய்வாளரின் கையெழுத்தும், மேற்படி காவல் ஆய்வாளர் இவ்வழக்கு சம்மந்தமாக புலன் விசாரணையில் ஈடுப்பட்ட விபரமும், அசா.10க்கு தெரிந்துள்ளது.

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:38:02 +0530

அதனடிப்படையில் மேற்படி காவல் ஆய்வாளர் இவ்வழக்கு சம்மந்தமாக புலன் விசாரணை செய்து, குற்ற அறிக்கை தாக்கல் செய்தது குறித்து ஆவணங்களை பார்த்து அசா.10 சாட்சியம் அளித்துள்ளார்.

5 (10). இவ்வழக்கு விபத்தில் காயம்பட்டு இறந்துபோன நபரின் பெயர், இவ்வழக்கின் குற்ற அறிக்கையில் அருள்மொழி என்றும் அவர் ஓட்டியதாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்திற்கான அசாஆ.6 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் அவரது பெயர் அருண்மொழி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் தெளிவுரைக்காக இத்தீர்ப்புரையில் அவரது பெயரை அருள்மொழி (எ) அருண்மொழி என குறிப்பிடப்பட்டுள்ளது.

5 (11). இந்த விபத்து சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அசா.1, 3 முதல் 5 வரையிலான சாட்சிகளை அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு இந்த விபத்து குறித்து எதுவும் தெரியாது என்று அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் அசா.3, அவரை இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கு 2, 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், அவர் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது, நாகூரிலிருந்து செல்லும் ECR சாலையில் ஓர் இருசக்கர வாகனம் எரிந்துகொண்டிருந்துள்ளதை பார்த்தேன் என்றும், சம்பவம் பற்றி வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். சம்பவம் குறித்து கேள்விப்பட்டதாக சொல்லி,

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.23 19:38:19 +0530

அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.2ம், தனக்கு இந்த வழக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது, சம்பவம் நடந்த இடம் எந்த பஞ்சாயத்திற்குள் வருகிறது ? என்றும், அதை அடையாளம் காட்டுங்கள் என்றும் போலீசார் என்னிடம் விசாரித்தார்கள் என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். பார்வை மகசர் சாட்சியாக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.6ம், தனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது, அசாஆ.3 ஆன பார்வை மகசரில் உள்ள சாட்சி கையெழுத்துக்கள் எதுவும் என்னுடையதில்லை, போலீசார் என்னை விசாரிக்கவில்லை என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

5 (12). மேற்சொல்லப்பட்டவாறு அசா.1 முதல் 6 வரையிலான சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளதால், அரசுத்தரப்பில் அவர்களை பிறழ் சாட்சிகளாக அனுமதிக்கக் கோரப்பட்டது. அவ்வாறே அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், மேற்படி சாட்சிகளை அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

6. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சிய விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளில், இவ்வழக்கு எதிரிக்கு பாதகமாக அளிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து, இன்று 23.07.2026 ஆம் தேதி குவிமுச. பிரிவு 313 (1) (b)ன் கீழ், இவ்வழக்கு எதிரியிடம்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:38:27 +0530

எடுத்துக்கூறி விளக்கி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வழக்கு எதிரி **"தனக்கு எதிராக கூறப்பட்ட அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் பொய். எனக்கும், இந்த விபத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. யாரோ ஒரு சாராய வியாபாரி ஏற்படுத்திய விபத்திற்கு அவரை கண்டுப்பிடிக்க இயலாமல், நானும் ஒரு சாராய வியாபாரி என்பதால், என் மீது இந்த பொய் வழக்கை போட்டுள்ளார்கள். இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்திற்கும், எனக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை என தெரிந்தும், என் மீது போலீசார் இந்த வழக்கை பொய்யாக போட்டுள்ளார்கள். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை"** என தெரிவித்தார். எனவே, எதிரி தரப்பு சாட்சிய விசாரணை இல்லையென முடிக்கப்பட்டது. எதிரி தரப்பில் எந்தவித சாட்சிய, சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. பின்னர் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7. தற்போது தீர்வுக்குரிய விபரம் யாதெனில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.

8. **<u>தீர்வு :-</u>**

8 (1). அரசுத்தரப்பில், இதச பிரிவுகள் 279, 304(A) மற்றும் u/s. 4 (1) (aa) TNP Act (Transport)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக சொல்லி, இவ்வழக்கின்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:38:35 +0530

எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கின் எதிரியை இதச பிரிவு 279ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என்றால், அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, பொதுசாலையில் இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ, மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் வாகனத்தை இயக்கினார் என்பதை அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட வேண்டும். மேலும், இ.த.ச பிரிவு 304 (A)ன் கீழ் இவ்வழக்கின் எதிரியை தண்டிக்கப்பட வேண்டும் என்றால், கீழ்க்கண்ட நான்கினை அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட வேண்டும்.

i) விபத்து ஏற்பட்டு, அந்த விபத்தில் ஏற்பட்ட காயத்தினால்தான் அருள்மொழி (எ) அருண்மொழி என்பவர் இறந்தார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

ii) வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்தில், விபத்தானது விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களில் எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

iii) விபத்தில் சம்பந்தப்பட்ட பதிவு செய்யப்படாத வாகனத்தினை எதிரிதான் ஓட்டினார் என கண்ணுற்ற சாட்சியங்கள் மூலமோ அல்லது சூழ்நிலை சாட்சியங்கள் அதாவது விபத்திற்கு பின்னிட்டு எதிரியின் நடவடிக்கைகள் மூலமோ உறுதிப்படுத்தபட வேண்டும் மற்றும்,

iv) விபத்து சமயத்தில் எதிரி அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ அல்லது கவனக்குறைவாகவோ வாகனத்தை ஓட்டினார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:38:40 +0530

மேலும், u/s. 4 (1) (aa) TNP Act (Transport)ன் கீழ் இவ்வழக்கின் எதிரியை தண்டிக்கப்பட வேண்டும் என்றால், அரசுத்தரப்பில் சொல்லப்படும் வாகனத்தின் மூலம் எதிரி அரசு அனுமதி மற்றும் உரிமமின்றி குற்றமுறு எண்ணத்தில் சுமார் 50 லிட்டருக்கு மேல், 100 லிட்டருக்குள்ளான மதுபானத்தினை கொண்டு சென்றார் என்பதனை அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட வேண்டும்.

8 (2). எதிரிதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல இவ்வழக்கின் விபத்து ஏற்படவில்லை. இவ்வழக்கின் விபத்திற்கு இவ்வழக்கு எதிரியும் காரணமில்லை. அரசுத்தரப்பில் சொல்லப்படும் இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட பதிவு செய்யப்படாத வாகனத்திற்கும், இவ்வழக்கின் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அரசுத்தரப்பில் சொல்லப்படுவதுபோல, இவ்வழக்கின் எதிரி மேற்படி பதிவு செய்யப்படாத வாகனத்தில் சாராயத்தை கொண்டு செல்லவும் இல்லை. யாரோ சாராயத்தை மேற்படி பதிவு செய்யப்படாத வாகனத்தில் கொண்டுசெல்லும்பொழுது மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழி மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி, அவருக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். அந்த நபரை யார் என்று போலீசாரால் கண்டுபிடிக்க இயலவில்லை. அவ்வாறு கண்டுபிடிக்க இயலாத வழக்கை முடிக்க வேண்டி, இவ்வழக்கின் எதிரியும் ஓர் சாராய வியாபாரி என்பதால், அவர்தான் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டிருப்பார் என்று பின்னிட்டு சாட்சிய, சான்றாவணங்களை ஜோடனை செய்து இந்த வழக்கானது எதிரிக்கு எதிராக தவறாக போடப்பட்டது. அதற்கு ஆதரவாக சம்பவ இடத்திற்கே வராத, இந்த விபத்தில்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.23 19:38:47 +0530

காயம்பட்டு இறந்துபோன அருள்மொழி (எ) அருண்மொழியிடம் வேலை செய்யும் பிரபாகரன் என்பவரை, சம்பவ இடம் வந்து இந்த விபத்தில் காயம்பட்ட மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியை சம்பவ இடத்தில் வைத்தே பார்த்ததாகவும், இவ்வழக்கின் எதிரிதான் இவ்விபத்தினை ஏற்படுத்தியதாக அங்கிருந்த மற்றவர்கள் சொல்லி அவர் கேள்விப்பட்டதாகவும், காயம்பட்ட மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியை அவரே 108 ஆம்புன்ஸ் மூலம் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுச் சென்று சேர்த்ததாகவும், பின்னிட்டு அவர்தான் வெளிப்பாளையம் காவல் நிலையம் ஆஜராக அசா.10திடம், அசாஆ.1 ஆன இவ்வழக்கின் எழுத்துமூலமான புகாரினை கொடுத்ததாகவும், மேற்படி பிரபாகரனின் சாட்சியம் மற்றும் அசாஆ.1 ஆன இவ்வழக்கின் புகார் உள்ளிட்ட, சாட்சிய, சான்றாவணங்கள் வழக்கிற்காக பின்னிட்டு ஜோடிக்கப்பட்டுள்ளது. மேலும் விபத்து குறித்து இந்த வெளிப்பாளையம் காவல் நிலையத்திற்கு ஏற்கனவே கிடைக்கப்பெற்ற தகவலையும் மறைத்து, இவ்வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை பின்னிட்டு உருவாக்கப்பட்டுள்ளது. அதனால்தான் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது, அரசுத்தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிருபணம் செய்ய இயலவில்லை. எனவே, இவ்வழக்கின் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டார்.

8 (3). இருதரப்பு வாதங்கள் அடிப்படையிலும், அசாஆ.8 ஆன பிரேத விசாரணை அறிக்கை அடிப்படையிலும், இந்த விபத்தில் ஏற்பட்ட காயங்களினால்தான்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.23 19:38:56 +0530

அருள்மொழி (எ) அருண்மொழி என்பவர் இறந்துள்ளார் என்பது குறித்து இருதரப்பிற்கு இடையே மாறுபட்ட கருத்துக்கள் எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது. மேலும், இவ்வழக்கில் இருதரப்பு வாதங்கள் மற்றும் அசாஆ.6 மற்றும் 7 ஆன மோட்டார் வாகன ஆய்விற்கைகள் ஆகியவைகள் அடிப்படையிலும், இவ்விபத்தில், அரசுத்தரப்பில் சொல்லப்படும் இருவாகனங்கள் சம்பந்தப்பட்டுள்ளது என்பது குறித்தும், இவ்விபத்தானது மேற்படி வாகனங்களின் எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்பது குறித்தும், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 25 W 5884 என்ற Bajaj CT 100 இருசக்கர வாகனத்தை, இவ்வழக்கு விபத்தில் காயம்பட்டு இறந்துபோன அருள்மொழி (எ) அருண்மொழிதான் விபத்து சமயத்தில் ஓட்டினார் என்பது குறித்தும், மாறுபட்ட கருத்துக்கள் எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது. இவ்வழக்கில், இருதரப்பிற்கு இடையேயுள்ள மாறுபட்ட கருத்து யாதெனில், அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, இவ்வழக்கின் எதிரிதான் பதிவு செய்யப்படாத இருசக்கர வாகனத்தில் சாராயத்தை எடுத்துக்கொண்டு வந்தபோது இவ்வழக்கின் விபத்தினை ஏற்படுத்தினாரா ? என்பதே ஆகும்.

8 (4). எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க, அரசுத்தரப்பில் மொத்தம் 10 சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்ப்பட்டுள்ளது. அவர்கள் மூலம் அசாஆ.1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அரசுத்தரப்பு வழக்குப்படி, அசா.1, 3 முதல் 5 ஆகிய

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.23 19:39:03 +0530

சாட்சியங்கள் இந்த விபத்தினை கண்ணுற்ற நபர்கள். அசா.2, இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன அருள்மொழி (எ) அருண்மொழியின் உடன்பிறந்த தம்பியான அசா.7 மற்றும் அவரது ஊரைச்சேர்ந்த அசா.8 ஆகியோர்கள் இந்த விபத்து குறித்து கேள்விப்பட்ட சாட்சியங்கள். அசா.6 பார்வை மகசர் சாட்சி. அசா.9 ஆன காவலர் ஆய்வாளர் உத்தரவுபடி, அவர் வழங்கிய சடலக் கூறாய்விற்கான வேண்டுகோள் கடிதத்தினை மருத்துவரிடம் வழங்கியவர் மற்றும் சடலக்கூறாய்விற்கு பின்னிட்டு மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியின் பிரேதத்தினை உறவினர்கள்வசம் ஒப்படைத்தவர் ஆவார். அசா.10 ஆன சிறப்பு உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் புகாரினை பெற்று, முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தவர் ஆவார். மேலும் அவரே இவ்வழக்கின் புலன் விசாரணையை காவல் ஆய்வாளர் திரு. தியாகராஜன் மேற்கொண்டது சம்பந்தமாக ஆவணங்களைப் பார்த்து சாட்சியமளித்தவரும் ஆவார்.

8 (5). சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.1, 3 முதல் 5 ஆகிய சாட்சியங்கள் யாருமே, இந்த விபத்தினை தாங்கள் கண்ணுற்றதாகவும், விபத்தில் சம்பந்தப்பட்ட பதிவு செய்யப்படாத வாகனத்தில் சாராயத்தை ஏற்றிக்கொண்டு வந்த இவ்வழக்கின் எதிரிதான் இவ்விபத்தினை ஏற்படுத்தியதாகவும், இந்த விபத்திற்கு இவ்வழக்கின் எதிரிதான் காரணம் என்றும், அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை. மாறாக அசா.1, நான் தற்சமயம் பாலையூர் தெற்கு தெருவில்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:39:10 +0530

வசித்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் போலீசார் என்னை தேடி எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். முதல்நாள் ECR பைபாசில் நடந்த விபத்து குறித்து தெரியுமா ? என்று என்னிடம் கேட்டார்கள். நான் தெரியாது என்று சொன்னேன். சம்பவம் நடந்த இடத்தை அடையாளம் காட்டுமாறு சொன்னார்கள் எனதான் அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். அசா.3ம், சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நாகூரிலிருந்து செல்லும் ECR சாலையில், நான் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது, ஓர் இருசக்கர வாகனம் எரிந்துகொண்டிருந்ததை பார்த்தேன். சம்பவம் பற்றி வேறு எதுவும் எனக்கு தெரியாது எனதான் அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். அசா.4ம், விபத்தில் இறந்துபோன அருள்மொழியை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். அசா.5ம் இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ECR சோழை மஹால் மண்டபம் அருகே தர்பூசணி கடை வைத்திருந்தேன். அப்போது அங்கு வந்த போலீசார் என்னிடம் பெயர் விவரங்களை கேட்டார்கள். அதன்பின்னர் தற்போது வரசொல்லியுள்ளார்கள். போலீசார் வேறு எதுவும் என்னிடம் விசாரிக்கவில்லை என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:39:16 +0530

8 (6). சம்பவம் குறித்து கேள்விப்பட்டதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.2, 7 மற்றும் 8 ஆகிய சாட்சிகளும் இவ்வழக்கின் விபத்திற்கு இவ்வழக்கின் எதிரிதான் காரணம் என்றும், இவ்வழக்கின் எதிரி விபத்து சமயத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட பதிவு செய்யப்படாத இருசக்கர வாகனத்தில் சாராயத்தை ஏற்றி வந்தார் என்று தாங்கள் கேள்விப்பட்டதாகவும், அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை. மாறாக, அசா.2, நான் தற்சமயம் பாலையூர் அழிஞ்சமங்களத்தில் வசித்து வருகிறேன். சுமார் 2லிருந்து 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் போலீசார் என்னை தேடி என் அம்மா பணிபுரிந்த பஞ்சாயத்து ஆஃபிஸிற்கு வந்தார்கள். முதல்நாள் ECR பைபாசில் நடந்த விபத்து குறித்து தெரியுமா ? என்று என்னிடம் கேட்டார்கள். நான் தெரியாது என்று சொன்னேன். சம்பவம் நடந்த இடம் எந்த பஞ்சாயத்தில் வரும் ? என்று கேட்டார்கள் மற்றும் அடையாளம் காட்டுமாறும் சொன்னார்கள் எனதான் அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். அதேபோல, அசா.7ம், கடந்த 04.03.2022 ஆம் தேதி இரவு 10.00 மணியளவில், என் உடன்பிறந்த அண்ணன் அருண்மொழி இருசக்கர வாகனத்தில் சென்றபோது, வேறொரு இருசக்கர வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு, நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு வந்துபார்த்தேன் எனதான் சாட்சியமளித்துள்ளார். அசா.8ம், தங்கள் ஊரைச்சேர்ந்த அருண்மொழிக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு வந்து பார்த்ததாகத்தான் சாட்சியமளித்துள்ளார்.

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:39:23 +0530

8 (7). இந்நிலையில், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க, சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி வேறு எந்த சாட்சிகளையும் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை.

8 (8). அசாஆ.1 ஆன இவ்வழக்கின் புகாரினை, இந்த விபத்தில் இறந்துபோன அருள்மொழி (எ) அருண்மொழியிடம் அறுவடை இயந்திரம் ஓட்டும் வேலை செய்யும் பிரபாகரன் என்பவர்தான், வெளிப்பாளையம் காவல் நிலையம் ஆஜராகி, கடந்த 05.03.2022 ஆம் தேதி அதிகாலை 02.00 மணியளவில் தன்னிடத்தில் கொடுத்தார். அதனடிப்படையில் நான்தான் அசாஆ.2 ஆன இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன் என அசா.10 ஆன சிறப்பு உதவி ஆய்வாளர் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார். அசா.10 சாட்சியமளித்ததுபோல, மேற்படி பிரபாகரன்தான் அசாஆ.1 ஆன இவ்வழக்கின் புகாரினை கொடுத்தார் என்பதை உறுதிப்படுத்த, அவரை இந்த வழக்கில் சாட்சியாக முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை.

8 (9). அசாஆ.1 ஆன இவ்வழக்கின் புகார் மற்றும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும், அசாஆ.2 ஆன இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை ஆகிய ஆவணங்களில் கண்டுள்ளவாறு, மேற்படி பிரபாகரனே விபத்து குறித்து கேள்விப்பட்டு சம்பவ இடம் வந்து, இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன அருள்மொழி (எ) அருண்மொழியை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.23 19:39:28 +0530

கொண்டுபோய் சேர்த்திருந்தால், மேற்படி மருத்துவமனையில், மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியை யார் என்று விவரங்கள் சொல்லி சேர்த்திருப்பார். ஆனால் மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதற்கான அசாஆ.9 ஆன விபத்து பதிவேட்டு ஆவணத்தை பரிசீலினிக்கையில், மேற்படி மருத்துவமனையில், மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியை சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டபோது, Unknown என்று குறிப்பிடப்பட்டுள்ளது புலனாகின்றது. அதேபோல மேற்படி விபத்து பதிவேட்டு ஆவணத்தில், மேற்படி பிரபாகரன்தான் மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியை சிகிச்சைக்காக கொண்டுபோய் சேர்த்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை.

8 (10). இவ்வழக்கின் புகாரினை பெற்று, இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாக சொல்லப்படும், அசா.10 ஆன சிறப்பு உதவி ஆய்வாளரே தனது குறுக்கு விசாரணையில், **"நான் பெற்ற புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கைப்படி, இந்த விபத்தானது கடந்த 04.03.2022 ஆம் தேதி இரவு 10.00 அல்லது 10.30 மணிக்கு நடைபெற்றது. சம்பவம் நடந்த உடனேயே சம்பவ இடத்திலிருந்து வந்த போன் தகவல் அடிப்படையில் சம்பவ இடம் சென்றேன். அப்போது ஓர் இருசக்கர வாகனம் எரிந்துகொண்டிருந்தது. அடிபட்டவர் இறந்துவிட்டார் என நினைத்து நான்தான் ஆம்புலன்ஸில் ஏற்றி அனுப்பி வைத்தேன். அதன்பின்னிட்டுத்தான் புகார் கொடுத்த நபர் ஓர் குரூப்பாக வேளாங்கண்ணியிலிருந்து காவல் நிலையத்திற்குத்தான் நேராக வந்தனர். நான் சம்பவ இடத்தில் இருந்து பாடியை மருத்துவமனைக்கு அனுப்பி**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:39:35 +0530

**வைக்கும்வரை புகார் கொடுத்த நபர்கள் உள்ளிட்ட, அவரை சார்ந்தவர்கள் யாரும் சம்பவ இடத்திற்கு வரவில்லை. அடிபட்ட நபர் யார் என்றே அப்போது எங்களுக்கு தெரியாததால்தான் மருத்துவமனைக்கு அப்படியே அனுப்பி வைத்தோம். மேற்படி அருண்மொழியை யார் என்று தெரியாத நிலையில், மேற்படி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம்தான் அசாஆ.9. மேற்கண்ட சூழ்நிலையில், அசாஆ.1 ஆன புகாரில் அதனைக் கொடுத்தவரே, சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சம்பவ இடம் வந்ததாகவும், அடிபட்டு கிடந்த தனது உரிமையாளர் அருண்மொழியை சம்பவ இடத்தில் வைத்து பார்த்ததாகவும், சொல்லப்பட்டுள்ள விவரங்கள் தவறானதுதான்"** என ஒப்புக்கொண்டு அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

8 (11). மேலும் அசா.10 பதிவு செய்ததாக சொல்லப்படும், அசாஆ.2 ஆன இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையில், சம்பவம் நடந்த உடனேயே அசா.10 சம்பவ இடம் சென்று, அவரே இந்த விபத்தில் காயம்பட்ட மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியை யார் என்று தெரியாத நிலையில் மருத்துவமனைக்கு ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டது குறித்தும், சம்பவ இடத்தில் எரிந்த நிலையில் ஓர் இருசக்கர வாகனம் இருந்ததை அவரே பார்த்தது குறித்தும், குறிப்பிடப்படாமல் மறைக்கப்பட்டுள்ளது. மேலும் அசா.10திடமே, இந்த விபத்து குறித்து தகவல் கிடைக்கப்பெற்றவுடன் சம்பவ இடம் சென்று பார்த்த விவரங்கள் அடிப்படையில், ஏன் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்படவில்லை ? மற்றும் அந்த விவரங்களை அசாஆ.2 ஆன முதல் தகவல்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:39:41 +0530

அறிக்கையில் காட்டப்படாமல் ஏன் மறைக்கப்பட்டது ? என எதிரி தரப்பில் வினாவப்பட்டதற்கு அவரால் எத்தகைய ஏற்புடைய விளக்கங்களையும் கூற இயலவில்லை. மாறாக, அடிபட்ட நபர் யார் என்று தெரியவில்லை என்பதால், உடனடியாக வழக்கு பதிவு செய்யவில்லை என அளித்த அசா.10தின் விளக்கம் சட்டப்படி ஏற்புடையதாகவும் இல்லை.

8 (12). கடந்த 04.03.2022 ஆம் தேதி இரவு 10.00 மணியளவில், நடந்ததாக சொல்லப்படும் இந்த விபத்து குறித்து, உடனடியாக தகவல் வந்துவிட்டது என அசா.10 ஆல் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், உடனடியாக வழக்கு பதிவு செய்யப்படவில்லை. மேற்படி விபத்து குறித்து, கடந்த 05.03.2022 ஆம் தேதி அதிகாலை 02.00 மணியளவில், பிரபாகரன் என்பவரால் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், அசா.10 ஆல் அசாஆ.2 ஆன இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக அசா.10தின் மூலம் அரசுத்தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு புகார் கொடுக்கப்பட்டது என்பதை மேற்படி புகாரினை கொடுத்ததாக சொல்லப்படும் பிரபாகரன் என்பவரை முன்னிலைப்படுத்தி அரசுத்தரப்பில் உறுதிப்படுத்தப்படவில்லை. அசா.10தே, புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் கண்ட வாசகங்கள் தவறானது என மேற்கண்டவாறு தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். கடந்த 05.03.2022 ஆம் தேதி அதிகாலை 02.00 மணியளவில், அசா.10 ஆல் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும், அசாஆ.2 ஆன இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை, உடனடியாக அருகில் உள்ள சம்பந்தப்பட்ட நீதித்துறை

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.23 19:39:47 +0530

நடுவர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. மாறாக, ஏறத்தாழ 24 நாட்கள் கழித்து கடந்த 29.03.2022 ஆம் தேதி காலை 10.30 மணியளவில், நீதிமன்றத்தில் காலதாமதமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு காலதாமதமாக சமர்ப்பிக்கப்பட்டது என ஒப்புக்கொள்ளும் அசா.10திடம், எதனால் காலதாமதமாக சமர்ப்பிக்கப்பட்டது ? என்பது குறித்து எதிரி தரப்பில் வினாவப்பட்டதற்கு, அவரால் எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும் கூற இயலவில்லை. மாறாக, அவர் அதுகுறித்து காரணம் எதுவும் இல்லை என அளித்த சாட்சியம் ஏற்புடையதாக இல்லை. மேற்கண்ட சூழ்நிலையில், மேற்கண்ட அரசுத்தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் மற்றும் எதிரிதரப்பு வாதுரை ஆகியவைகளை பார்க்கின்றபோது, ஏற்கனவே இந்த விபத்து குறித்து கிடைக்கப் பெற்ற உண்மைத் தகவலை மறைத்து, எதிரியை இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக உட்படுத்தி, இவ்வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது, வழக்கிற்காக தவறாக பின்னிட்டு அசா.10 ஆல் உருவாக்கப்பட்டதா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. மேலும், மேற்படி பிரபாகரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அசாஆ.1 ஆன புகாரின் அடிப்படையில்தான், இந்த விபத்து குறித்து முதன்முதலாக இந்த வெளிப்பாளையம் காவல் நிலையத்திற்கு தகவல் வந்தது என தனது முதல் விசாரணையில் அளித்த, அசா.10 தின் சாட்சியம் நம்பும்படியான ஒன்றா ? என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது. எனவே, அசா.10தின் சாட்சியமும், அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட அசாஆ.1 ஆன புகார் மற்றும் அசாஆ.2 ஆன முதல் தகவல் அறிக்கை ஆகிய சான்றாவணங்கள், அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:39:54 +0530

8 (13). தன்னிடமிருந்து இவ்வழக்கு கோப்பினை பெற்றுக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு. தியாகராஜன் என்பவர்தான் சம்பவ இடம் சென்று, இவ்வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு, அசாஆ.3 ஆன பார்வை மகசர் மற்றும் அசாஆ.4 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்தார். சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன மேற்படி அருள்மொழி (எ) அருண்மொழியின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் விசாரணை செய்து, பிரே விசாரணை அறிக்கை தயார் செய்தார். கடந்த 05.03.2022 ஆம் தேதியே மாலை 05.00 மணியளவில், வெளிப்பாளையம் புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் வைத்து, இந்த விபத்து சம்பந்தமாக இவ்வழக்கின் எதிரியை கைது செய்தார். இந்த விபத்தில் எதிரிக்கும் காயம் ஏற்பட்டிருந்ததால், அன்று மாலை 05.15 மணியளவில் நிலையம் கொண்டுவந்து, உடனடியாக எதிரியை மேற்படி காவல் ஆய்வாளர் காவல் நிலைய பிணையில் விடுவித்தார் என அசா.10 அளித்த சாட்சியம் பொய்யென எதிரி தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது.

8 (14). இந்நிலையில், மேற்கண்டவாறு மேற்படி காவல் ஆய்வாளர் திரு. தியாகராஜனால் இவ்வழக்கின் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்த, அவரை சாட்சியாக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. பார்வை மகசர் சாட்சியாக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.6, தன் முன்னிலையில் மேற்கண்டவாறு சம்பவ இடத்தை பார்வையிட்டு, இவ்வழக்கின் பார்வை மகசர், மாதிரி

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:40:00 +0530

வரைபடம் தயார் செய்யப்பட்டது என அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மாறாக அசா.6, தனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. தற்போது காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையெழுத்துக்கள் எதுவும் என்னுடையதில்லை. போலீசார் என்னை எதுவும் விசாரிக்கவில்லை என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். இந்த விபத்தில் இறந்துபோன அருள்மொழி (எ) அருண்மொழியின் பிரேதத்தின் மீது மேற்கண்டவாறு மேற்படி காவல் ஆய்வாளரால், பிரேத விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்த பிரேத விசாரணை அறிக்கை உள்ளிட்ட, ஆவணங்களையும் இந்த வழக்கு சம்பந்தமாக ஆஜர் செய்யப்படவில்லை. அதேபோன்று, அசா.10 சாட்சியமளித்ததுபோல, இவ்வழக்கின் எதிரியை கைது செய்யப்பட்டு, காவல் நிலைய பிணையில் மேற்படி காவல் ஆய்வாளரால் விடுவிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தவும், எந்தவித சான்றாவணங்களையும், இந்த வழக்கு சம்பந்தமாக அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. குறைந்தபட்சம், இந்த விபத்தில் எதிரிக்கும், காயம் ஏற்பட்டது என்பதை உறுதிப்படுத்த, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியால் விசாரணை செய்து, எந்தவித மருத்துவ சாட்சிய, சான்றாவணங்களையும், இவ்வழக்கில் சாட்சிய, சான்றாவணங்களாக காட்டப்படவில்லை. அரசுத்தரப்பிலும் எந்தவித மருத்துவ சாட்சிய, சான்றாவணங்களையும் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தவில்லை. குறைந்தபட்சம், இவ்வழக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்டதாக சொல்லப்படும் எதிரியிடமிருந்துகூட எந்தவித வாக்குமூலமும் பெற்று தாக்கல் செய்யவில்லை.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:40:07 +0530

8 (15). சம்பவ இடத்திலிருந்து காயங்களுடன் தப்பி சென்றதாக சொல்லப்படும் எதிரி, எதற்காக இந்த வெளிப்பாளையம் காவல் நிலையம் எதிரே உள்ள வெளிப்பாளையம் புதிய பேருந்து நிலையத்திற்கு, கடந்த 05.03.2022 ஆம் தேதி மாலை 05.00 மணியளவில் வந்திருந்தார் ? என்பது குறித்தும், அவர்தான் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பதிவு செய்யப்படாத இருசக்கர வாகனத்தை ஓட்டினார் என்று, மேற்படி காவல் ஆய்வாளர் எவ்வாறு அடையாளம் கண்டு கைது செய்தார் ? என்பது குறித்தும், எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும் அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை. மேலும், அரசுத்தரப்பில் சொல்லப்படும் பதிவு செய்யப்படாத வாகனம், மதுவை ஏற்றிவந்து இந்த விபத்தில் ஈடுபட்டது என்பதையும், மதுவை ஏற்றி வந்து இந்த விபத்தில் ஈடுபட்டதால், அந்த வாகனம் சம்பவ இடத்திலயே எரிந்துகொண்டிருந்தது, அதனை அசா.10தான் அனைத்தார் என்பதையும் உறுதிப்படுத்த, அந்த வாகனத்தை கைப்பற்றி இந்த வழக்கு சம்பந்தமாக ஆஜர் செய்யப்படவில்லை. அந்த இடத்திலும், அந்த வாகனத்திலும், மது வாடை இருந்தது என்பதை உறுதிப்படுத்த, புலன் விசாரணை நிமித்தமாக ரசாயன பகுப்பாய்விற்காக எவ்வித தடயங்களையும் சேகரம் செய்யப்படவில்லை. அதற்கான காரணங்களும் அரசுத்தரப்பில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் மூலம் சொல்லப்படவில்லை. மேலும் இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட, மேற்படி பதிவு செய்யப்படாத வாகனத்திற்கும், இவ்வழக்கின் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என எதிரி தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி வாகனம் எதிரியுடையதுதான் என்பதை உறுதிப்படுத்தவும், மேற்படி வாகனம் விபத்து சமயத்தில் எதிரியிடம் எப்படி வந்தது ? என்பதை உறுதிப்படுத்தவும், எந்தவித சாட்சிய,

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:40:12 +0530

சான்றாவணங்களையும் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.10 ஆன சிறப்பு உதவி ஆய்வாளரே, இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட எரிந்துபோன வாகனத்தின் உரிமையாளர் யார் ? என்று தெரியாது என ஒப்புக்கொண்டு அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட சாட்சிய, சான்றாவணங்கள், அரசுத்தரப்பு செயல்பாடு மற்றும் எதிரி தரப்பு வாதுரை ஆகியவைகளை பார்க்கின்றபோது, அசா.10 சாட்சியமளித்ததுபோல, மேற்படி காவல் ஆய்வாளர் திரு. தியாகராஜன் இவ்வழக்கினை முறையாக புலன் விசாரணை செய்தாரா ?, யாரோ ஒரு சாராய வியாபாரி ஏற்படுத்திய இவ்விபத்தில், அதை ஏற்படுத்தியவர் யார் என்று கண்டுபிடிக்க முடியாமல், இவ்வழக்கு எதிரியை கொண்டு இவ்வழக்கினை முடிக்க வேண்டி பின்னிட்டு உருவாக்கப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களில் புலன் விசாரணையில் ஈடுபட்டதுபோல, வெறுமனே மேற்படி காவல் ஆய்வாளர் கையொப்பம் மட்டும் போட்டாரா ? என்ற சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

8 (16). இவ்வாறு இவ்வழக்கில், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட மொத்தம் 9 சாட்சியங்களில், சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் அசா.1, 3 முதல் 5 ஆகிய சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்கள். இவ்வழக்கின் எதிரிதான் அரசுத்தரப்பில் சொல்லப்படுவதுபோல, மேற்படி இருசக்கர வாகனத்தில் மதுவை ஏற்றிக்கொண்டு வந்து, இந்த விபத்தினை ஏற்படுத்தினார்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:40:18 +0530

என்பதை கண்ணுற்ற சாட்சியங்கள் மூலம் அரசுத்தரப்பில் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், இவ்வழக்கு சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பதிவு செய்யப்படாத இருசக்கர வாகனம் யாருடையது ? என்பதையும் அரசுத்தரப்பில் உறுதிப்படுத்தப்படவில்லை. சம்பவம் குறித்து கேள்விப்பட்டதாக சொல்லப்படும் அசா.2, 7 மற்றும் 8டின் சாட்சியங்களின் சாட்சியமும், இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக இவ்வழக்கில் அமையவில்லை. பார்வை மகசர் சாட்சியான அசா.6ம், அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன அருள்மொழி (எ) அருண்மொழியின் பிரேதத்தினை சடலக்கூறாய்விற்கு உட்படுத்தவும், சடலக் கூறாய்விற்கு பின்னர் அவரின் உறவினர்வசம் ஒப்படைக்கவும் உதவியாகவும் இருந்தவர்தான் அசா.9 ஆன காவலர். அவரது சாட்சியமும் இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக இல்லை. அசாஆ.1 ஆன இவ்வழக்கின் புகாரினை அசா.10 சாட்சியமளித்ததுபோல, பிரபாகரன் என்பவர்தான் நிலையம் ஆஜராகி கொடுத்தார் என்பதை அரசுத்தரப்பில் உறுதிப்படுத்தப்படவில்லை. மாறாக, இவ்வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது, ஏற்கனவே இந்த விபத்து குறித்து கிடைக்கப்பெற்ற உண்மைத் தகவலை மறைத்து, இவ்வழக்கு எதிரிதான் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதுபோல, இவ்வழக்கின் எதிரியை உட்படுத்தி பின்னிட்டு தவறாக அசா.10 ஆல் உருவாக்கப்பட்டதா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. அசா.10தின் சாட்சியமும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதில்லை என இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ளது. மேலும், அசா.10 சாட்சியமளித்ததுபோல, மேற்படி காவல் ஆய்வாளர் திரு. தியாகராஜன்

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:40:26 +0530

இவ்வழக்கினை முறையாக புலன் விசாரணை செய்தாரா ?, யாரோ ஒரு சாராய வியாபாரி ஏற்படுத்திய இவ்விபத்தில், அதை ஏற்படுத்தியவர் யார் ? என்று கண்டுபிடிக்க முடியாமல், இவ்வழக்கு எதிரியை கொண்டு இவ்வழக்கினை முடிக்க வேண்டி, பின்னிட்டு உருவாக்கப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களில் புலன் விசாரணையில் ஈடுபட்டதுபோல, வெறுமனே மேற்படி காவல் ஆய்வாளர் கையொப்பம் மட்டும் போட்டாரா ? என்ற சந்தேகங்களை அரசுத்தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள், அரசுத்தரப்பு செயல்பாடு மற்றும் எதிரி தரப்பு வாதுரை ஆகியவைகள் இவ்வழக்கில் ஏற்படுத்தியுள்ளது. எனவே, எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது அரசுத்தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

9. **முடிவில்,**

**எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்வு காணப்பட்டிருப்பதால், இவ்வழக்கின் எதிரியை இதச பிரிவுகள் 279, 304(A) மற்றும் u/s. 4 (1) (aa) TNP Act (Transport)ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. எனவே, இவ்வழக்கின் எதிரியை இதச பிரிவுகள் 279, 304(A) மற்றும் u/s. 4 (1) (aa) TNP Act (Transport)ன் கீழான குற்றச்சாட்டுக்களில் இருந்து, குவிமுச. பிரிவு 255(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:40:32 +0530

10. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணையப்பத்திரமானது மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் தானே ரத்தாகும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. நாகப்பட்டினம் மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண்.204/2026 என்ற வழக்கில், நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.2 உத்தரவுபடி, கடலூர் மத்திய சிறையில் நீதிமன்ற காவலில் இருந்த இவ்வழக்கின் எதிரியை இந்நீதிமன்ற உத்தரவுபடி, இன்று PT வாரண்ட் மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். அவரை இவ்வழக்கின் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலை செய்யப்பட்டதால், இனி இவ்வழக்கு சம்பந்தமாக இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டியதில்லை என்று அறிவுறுத்தி, மீண்டும் மேற்படி நீதிமன்ற காவலுக்காக மேற்படி காவலர்கள் மூலமாகவே, கடலூர் மத்திய சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

11. இவ்வழக்கு சம்பந்தமாக வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்குச் சொத்துப்பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.23 19:40:39 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்,**

**நாகப்பட்டினம்.**

**இணைப்பு** -

**சாட்சியப்பட்டியல்**

**அரசு தரப்பு சாட்சிகள்** :-

| **வரிசை எண்.** | **சாட்சிகளின் பெயர்** |
|---|---|
| அ.சா.1 | திரு. மதியழகன். |
| அ.சா.2 | திரு. சந்திரமோகன் |
| அ.சா.3 | திரு. ரூபா அகஸ்டின் |
| அ.சா.4 | திரு. செந்தில்குமார். |
| அசா.5 | திரு. ரகு. |
| அசா.6 | திரு. ராதாகிருஷ்ணன். |
| அசா.7 | திரு. தசரதன். |
| அசா.8 | திரு. ரகுபதி. |
| அசா.9 | திரு. முருகானந்தம் (இரண்டாம் நிலை காவலர்.) |
| அசா.10 | திரு. சிவக்குமார் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**எதிரி தரப்பு சாட்சிகள்** :- இல்லை.

**சான்றாவணப்பட்டியல்:**

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | -- | புகார் - அசல் |
| அ.சா.ஆ.2 | 05.03.2022 | முதல் தகவல் அறிக்கை - அசல். |
| அ.சா.ஆ.3 | 05.03.2022 | பார்வை மகசர் - அசல். |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:40:47 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.4 | 05.03.2022 | மாதிரி வரைபடம் - அசல். |
| அ.சா.ஆ.5 | 06.03.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை - அசல் |
| அ.சா.ஆ.6 | 15.03.2022 | TN.25 W 5884 என்ற பதிவெண்கொண்ட Bajaj CT 100 இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை - அசல் |
| அ.சா.ஆ.7 | 15.03.2022 | பதிவு செய்யப்படாத NS பல்சர் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை - அசல் |
| அ.சா.ஆ.8 | 05.03.2022 | சடலக்கூறாய்வு அறிக்கை - அசல். |
| அ.சா.ஆ.9 | 04.03.2022 | அருள்மொழி (எ) அருண்மொழியை நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் - அசல். |

**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள் :-</u>** - இல்லை.

**<u>சான்றுப்பொருள் பட்டியல் :</u>**

**<u>அரசுத்தரப்பு சான்று பொருட்கள்:-</u>** இல்லை.

**<u>எதிரி தரப்பு சான்று பொருட்கள் :-</u>** இல்லை.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:40:54 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்,**

**நாகப்பட்டினம்.**

**<u>குறிப்பு</u>**

1 எதிரி PT வாரண்ட் மூலம் ஆஜர் செய்யப்பட்டார்.

2 சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.

3 எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து விடுதலை செய்யப்பட்டது.

4 தீர்ப்பு பற்றி சிறு குறிப்பு குற்ற முறையீட்டு காவல் நிலையத்தாருக்கு தெரிவிக்கப்பட்டது.

5 தீர்ப்பின் நகல் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் அமர்வு நீதமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

6 எதிரிக்கு அபராதம் விதிக்கப்படவில்லை.

7 தீர்ப்பு நாள்.23.07.2026.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.23 19:41:01 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்,**

**நாகப்பட்டினம்**.